1967 ஜூன் 20]

THIRU K. VINAYAKAM: What is the view of this Government as far as the Khadar problem is concerned? Does this Government continue to have confidence in it and will it continue to give sufficient aid that has been given to it by the former Government?

THE HON. THIRU C. N. ANNADURAI: To be very plain, this Government's view is that Khadar is a political badge and an economic impossibility.

THIRU K. VINAYAKAM: My question has not been answered. Does the Government propose to give to it the support which the former Governments had been giving?

THE HON. THIRU C. N. ANNADURAI: The latter part of the answer is that it is an economic impossibility which means that this Government should not be expected to encourage and maintain an economic impossibility. But due to political courtesy we are carrying it on, as it was carried on before.

திரு. ச. ஆர். கிருஷ்ணன்: ஐயா, இப்பொழுது இரண்டு மாத காலத்திற்கு முன்னால் கூட ஊராட்சி ஒன்றிப்பு மன்ற சிப்பந்திகள் கட்டாயமாக ரூ. 50-க்கு கதர் வாங்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரியுமா? முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபோன்ற குற்றச் சாட்டுக்கள் வந்ததால் தான் அப்படிப்பட்ட கட்டாயங்கள் திணிக் கப்படக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவு அடைந்தன.

குறிப்பு:—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) 'குறிஞ்சி' இதழில் வெளிவந்த கட்டுரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை முறையில் குற்றச் சாட்டுக்கள் இரண்டு மூன்று உள்ளன. முதல் பிரச்சினை, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்திருப்பது அவர்கள் ஒரு பத்திரிகைமீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த இதழைப் பார்த்த பிறகு, அந்தக் கட்டுரையைப் படித்த பிறகு, மாண்புமிகு உறுப்பினருடைய குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனாலும், ஒரு செய்தித்தாளின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தோன்றும்போது, எழுத்து உரிமை, கருத்து உரிமை, செயல் உரிமை போன்ற பற்பலவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவை எனக்குத் தெரிந்த போதிலும், அப்படி அவற்றைக் கணக்கில் எடுத்துப் பார்த்த

போதிலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களின் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருப்பதாகத்தான் தெரிகிறது. அந்த வகையில் நடவடிக்கை எடுக்க உரிமைக் குழுவிற்கு அனுப்பும் முன்னால், மற்றொரு கருத்தையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டிருக்கும் கட்டுரை, மதுரையிலிருந்து வெளியிடப்படுகிற, திரு. நெடுமாறன் என்பவரை ஆசிரியராகக் கொண்ட 'குறிஞ்சி' என்ற வார இதழில் 15—4—1967-ல் வெளியாகியிருக்கிறது. அதில் இந்த அவைத் தலைவரைப்பற்றி அவதூறாகவும், கண்ணியக் குறைவாகவும் இந்தக் கட்டுரை வெளியாகியிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், அந்தக் கட்டுரையை எத்தனை பேர்கள் படித்திருப்பார்கள்? இந்தப் பேரவையில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களில் பெரும்பான்மையோர்களைக் கேட்டால் சொல்லுவார்கள், 'இந்தக் கட்டுரையைப்பற்றி இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன்' என்று. ஆக, இதன் பேரில் அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டியது பெரிய காரியமா என்பதையும் நான் கவனத்தில் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராளுமன்றத்தில் உரிமைப் பிரச்சினைமீது, ஒரு நாள் இதழைப் பற்றிய பிரச்சினை எழும்பியபோது, திரு. கிளாட்ஸ்டன் கூறியதை மேற்கோளாகக் காட்டலாம். ஏராளமான மேற்கோள்கள் இருக்கின்றன. அவர் சொல்லுகிறார் 'ப்ரீச் ஆஃப் ப்ரிவிலேஜ்' என்பதைப்பற்றி:—

"To put this weapon unduly in force is to invite a combat upon unequal terms. It is not becoming the dignity of the House to take notice"

என்று அந்தக் கட்டுரையைப்பற்றிக் கூறி முடித்திருக்கிறார். ஆக, இப்பேரவையின் கண்ணியம் இந்தக் கட்டுரையால் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சின்னஞ்சிறு காரியங்களில் பேரவையின் விலை மதிக்க முடியாத நேரத்தைச் செலவு செய்ய வேண்டுமா என்பதையும் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட சின்னஞ்சிறு காரியங்களை நம் சட்டப் பேரவை கவனிக்கக் கூடாது என்பது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. 'De Minimus Non Curat Lex' என்று ஒரு லத்தீன் பழமொழி உண்டு. வழக்கறிஞர்களுக்குத் தெரியும். இதற்கு இணங்க, இந்தக் குற்றச்சாட்டைக் கொண்டு வந்த பேரவை உறுப்பினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தக் குற்றச்சாட்டு பேரவை முன் வந்ததே அந்தத் தாளிற்குப் போதிய எச்சரிக்கையாக இருக்கும் என்று கருதி, இந்தப் பிரச்சினைமீது மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்கின்ற முடிவைத் தெரிவிக்கிறேன்.